**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.202/2019** **P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பெயர் பிரபாகரன் தொழில்

த.பெ. மதம்

கிராமம் சாதி

வயது வட்டம்

**முதல் விசாரணை - 10.11.2022**

நான் இந்த வழக்கில் முதல் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 17 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 13.03.2013 – Original MOU between Plaintiffs and defendants – Ex.P.1.

2. 07.08.2015 – Original MOU between Plaintiffs and defendants – Ex.P.2.

3. Original Bank Statement for receipt of money from 01.03.2013 to 25.05.2013 – Ex.P.3.

4. 28.03.2014 – Certified copy of Mortgage deed Doc. No.3598 of 2014 – Ex.P.4.

5. 14.02.2019 – Original Notice issued to defendant by Plaintiff's counsel – Ex.P.5.

6. 25.02.2019 – Original Reply Notice received from the Defendants – Ex.P.6.

7. 11.06.2015 – Original Receipt issued for a sum of Rs.30,00,000/- as against Rs.31,64,000/- Ex.P.7.

8. 27.09.2017 – Original Receipt issued for a sum of Rs.47,02,500/- - Ex.P.8.

9. 27.09.2017 – Original Receipt issued for a sum of Rs.54,30,000/- - Ex.P.9.

10. 01.09.2015 – Certified copy of Construction agreement document no.11114/2015 dated 01.09.2015 in favour of 2nd defendant – Ex.P.10.

11. 01.09.2015 – Certified copy of Sale bearing document no.11115/2015 dated 01.09.2015 in favour of 2nd defendant – Ex.P.11.

12. 11.06.2015 – Certified copy of Construction agreement document no.7498/2015 dated 11.06.2015 in favour of 1st defendant – Ex.P.12.

13. 11.06.2015 – Certified copy of Sale bearing document no.7499/2015 dated 11.06.2015 in favour of 1st defendant – Ex.P.13.

14. 06.08.2015 – Certified copy of Construction agreement document no.8747/2015 dated 06.08.2015 in favour of daughter of defendants (Renuka Srinivasan) – Ex.P.14.

15. 06.08.2015 – Certified copy of Sale bearing document no.8748/2015 dated 06.08.2015 in favour of daughter of defendants (Renuka Srinivasan) – Ex.P.15.

16. 06.08.2015 – Certified copy of Construction agreement document no.8749/2015 dated 06.08.2015 in favour of daughter of defendants (Radhika Srinivasan) – Ex.P.16.

17. 06.08.2015 – Certified copy of Sale bearing document no.8750/2015 dated 06.08.2015 in favour of daughter of defendants (Radhika Srinivasan) – Ex.P.17.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நானும் என் மனைவியும் வாதிகள் என்றால் சரிதான். நான் கடன் வாங்கிய தேதியானது 18.01.2013 முதல் 08.03.2013 வரையில் என்றால் சரிதான். 08.03.2013க்கு பிறகு எந்த தொகையும் கடனாக பிரதிவாதியிடமிருந்து வாங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது 13.03.2013 அன்று MOU கையெழுத்திடப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது பிரதிவாதிகளிடமிருந்து கடன் வாங்கிய பிறகு தான் MOU கையெழுத்திடப்பட்டது என்றால் சரியல்ல, பணம் வாங்குவதற்கு முன்பு MOU-ல் கையெழுத்திடப்பட்டது. வா.சா.ஆ.1 யார் தயார் செய்தார்கள் என்றால் 2ம் பிரதிவாதி தான் தயார் செய்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தை நானும் எனது மனைவியும் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டோமா என்றால் படித்து பார்க்காமல் தான் கையெழுத்து போட்டோம். வா.சா.ஆ.1ல் ரூ.92,20,000/- தொகையை ரொக்கமாகவும் RTGS transaction மூலமாகவும் 2ம் தரப்பினர் பெற்றுக் கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் முதல் விசாரணை பத்தி 2ல் வா.சா.ஆ.1ல் MOU-ன் படி ரூ.92,20,000/- பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.1ல் MOU-ல் ரூ.92,20,000/-யை பிரதிவாதிகள் பூர்த்தி செய்து கொண்டார்கள், நான் ரூ.72,20,000/- மட்டும் தான் பெற்றுக்கொண்டேன். என்னுடைய முதல் விசாரணையில் பக்கம் 1ல் பத்தி 2ல் Amount promised to be transfered என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் ரூ.72,20,000/- மட்டும் தான் கடனாக பெற்றேன். எனது முதல் விசாரணையில் 25.02.2013 தேதியை நான்கு முறை எழுதப்பட்டுள்ளது என்றால் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் MOU-ல் 25.02.2013 தேதியானது இரண்டு முறை தான் எழுதப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தை பிரதிவாதிகளே எழுதிக் கொண்டதால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் 26.03.2013 என்று பக்கம் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியானது சரிதானா என்றால் சரிதான். 26.03.2013 அன்று ஒரு transaction நடைபெற்றுள்ளதா என்றால் எனது வங்கி கணக்கு பட்டியலை பார்த்து தான் சொல்லமுடியும். 08.03.2013க்கு பிறகு எந்த

transaction-ம் இல்லை என்று சொல்லியுள்ளது சரியா என்றால் சாட்சி தேதி குறித்து



சரியாக ஞாபகமில்லை என்று கூறுகிறார். 26.03.2013 அன்று ரூ.30,06,000/- RTGS மூலமாக

transfer செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து ஆவணத்தை பார்த்து தான் என்னால் சொல்லமுடியும். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து புரிந்து கொண்டு தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 26.02.2013 அன்று ரூ.1,06,000/-யை ரொக்கமாக வாங்கியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது குறித்து ஞாபகமில்லை. எனது முதல் விசாரணையில் 26.02.2013 அன்று ரூ.1,06,000/-யை RTGS மூலமாக வாங்கியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி ஞாபகமில்லை. எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள தொகைகளை பெற்றதற்கான வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் 25.02.2013 அன்று ரூ.10,00,000/-மும், 25.02.2013 அன்று ரூ.4,50,000/-மும், 26.03.2013 அன்று ரூ.30,06,000/-மும், RTGS மூலமாக தொகை transfer செய்யப்பட்டுள்ளது என்றால் 26.02.2013 அன்று ரூ.30,06,000/-மும், RTGS மூலமாக தொகை transfer செய்யப்பட்டது. மேற்படி விவரங்கள் வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் 26.03.2013 என்று சொல்லியிருப்பது தவறானது என்றால் தவறாகும். வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் 26.02.2013 அன்று ரூ.2,00,000/-மும், மற்றும் ரூ.1,06,000/-மும் RTGS மூலமாக தொகை transfer செய்யப்பட்டுள்ளது என்றால் ரூ.1,06,000/- குறித்து வா.சா.ஆ.3ல் Entry எதுவுமில்லை. வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் 08.03.2013 அன்று ரூ.8,20,000/- RTGS மூலமாக தொகை transfer செய்யப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 18.01.2013 அன்று ரூ.8,00,000/- ரொக்கமாக பெற்றது குறித்து வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 25.02.2013 அன்று ரூ.64,000/- ரொக்கமாக பெற்றது குறித்து வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. 07.03.2013 அன்று ரூ.1,80,000/- ரொக்கமாக பெற்றது குறித்து தெரியுமா என்றால்



தெரியவில்லை. நான் பிரதிவாதிகளிடமிருந்து எப்பொழுது தொகை ரொக்கமாக பெற்றேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியவில்லை. நான் பிரதிவாதிகளிடமிருந்து ரொக்கமாக பணம் எதுவும் பெறவில்லை. RTGS மூலமாக கொடுத்த தொகையும் Bounds ஆகிவிட்டது. வா.சா.ஆ.1ன் மூலம் 01.02.2013 அன்று ரூ.5,00,000/- நான் ரொக்கமாக பெற்றேன் என்றால் ரொக்கமாக பணம் ஏதும்

பெறவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

01.02.2013 அன்று ரூ.10,00,000/- RTGS மூலமாக நான் பெற்றேன் என்றால் வரவில்லை. நான் என்னுடைய அவசர தேவைக்காக ரூபாய் 10 லட்சத்தை ரொக்கமாக வாங்கினேன் என்றால் வாங்கவில்லை. வா.சா.ஆ.1ன் மூலமாக எனக்கு எந்த பணமும் வரவில்லை என்பதற்காக பிரதிவாதிக்கு அறிவிப்பு மற்றும் கடிதம் எதுவும் எழுத்து மூலமாக கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. பிரதிவாதி எனக்கு ரூபாய் 20 லட்சத்தை பிறகு தருகிறேன் என்று சொன்னார் என்றால் சொன்னார். பிரதிவாதி அவ்வாறு சொன்னதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ரூ.92,20,000/-க்கு நான் 36 சதவீதம் வட்டி கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் வட்டி கொடுத்துள்ளேன். மேற்படி தொகைக்கு வட்டியாக மாதத்திற்கு ரூ.2,76,600/- கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1ல் நான் 10 கையெழுத்து போட்ட காசோலைகள் தலா ரூ.2,76,600/- தேதி இல்லாமல் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி அந்த 10 காசோலைகளில் ஏதாவது ஒரு காசோலையை வங்கியில் போட்டாரா என்றால் வங்கியில் போடவில்லை. 22.02.2013 முதல் 24.11.2013 வரை 9 மாதங்களுக்கு வட்டி செலுத்தியதாக சொல்லியுள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை, ரொக்கமாக வட்டிதொகை செலுத்தியுள்ளேன். நான் வட்டி செலுத்தியதற்காக வங்கியில் இருந்து பணம் எடுத்து செலுத்தியதற்கு வங்கி ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. 24.11.2013க்கு பிறகு பிரதிவாதிக்கு நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. நான் எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் ரூ.80,04,000/- வட்டியாக பிரதிவாதிக்கு கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் ரூ.72,20,000/- தான் வாங்கியுள்ளேன் என்றும், ஆனால் ரூ.92,20,000/-க்கு வட்டி செலுத்தியுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லியுள்ளேன். நான் தொழில் செய்வதால் ரூ.72,20,000/- வாங்கிவிட்டு ரூ.92,20,000/-க்கு வட்டி செலுத்த மாட்டார்கள் என்று சொன்னால் எனக்கும், பிரதிவாதிக்கும் இடையில் கொடுக்கல், வாங்கல் இருந்து வந்ததால் நான் ரூ.92,20,000/-க்கு வட்டி செலுத்தினேன்.



நான் ரியல் எஸ்டேட் தொழில் மற்றும் கட்டிடம் கட்டும் தொழில் எத்தனை வருடமாக செய்து வருகிறேன் என்றால் 30 வருடங்களாக செய்து வருகிறேன். என் அனுபவத்தின் அடிப்படையில்

அடமானம், கிரய பத்திரம், ஆவணங்கள் எழுதுவது குறித்து எனக்கு தெரியும் என்றால் தெரியும். வா.சா.ஆ.4 அடமான பத்திரத்தில் என்னுடைய மனைவி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் நான் 2வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 அடமான பத்திரம் எழுதும் போது நானும், என் மனைவியும் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 அடமான பத்திரத்தை ஒரு பத்திர எழுத்தர் தான் எழுதினார் என்றால் பிரதிவாதிதான் பத்திர எழுத்தர் மூலம் தயார் செய்தார். வா.சா.ஆ.4 அடமான பத்திரத்தை எழுதிய பத்திர எழுத்தரின் பெயர் விஜயலட்சுமி, நம்பர் 5, முத்துராஜா தெரு, வேளச்சேரி என்ற விலாசம் ஆகும். நான் கட்டிடம் கட்டும் தொழில் செய்வதால் வா.சா.ஆ.4 பத்திரம் எழுதிய பத்திர எழுத்தர் தான் எனக்கு அனைத்து ஆவணங்களையும் எழுதி தருவார் என்றால் மற்ற சில ஆவணங்களையும் நான் விஜயலட்சுமியிடம் எழுதி வாங்கியுள்ளேன். வா.சா.ஆ.4 அடமான பத்திரத்தில் என்ன தொகை போடப்பட்டுள்ளது என்றால் ரூ.1,34,56,000/- போடப்பட்டுள்ளது. அந்த அடமான பத்திரத்தில் இரண்டு சர்வே எண்களுக்கான சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே எண்கள்.216/1ல் 33 செண்ட், 216/2ல் 9 செண்ட் மொத்தம் 42 செண்ட் வா.சா.ஆ.4ல் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு சர்வே எண்களுக்கான 4 எல்லைகள் வெவ்வேறாகும், அதன் விஸ்தீரணம் ஒன்றாகவும், வா.சா.ஆ.4ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இரண்டு சர்வே எண்களுக்கும் தனித்தனியாக 4 எல்லைகள் போடப்பட்டுள்ளது.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

5.10.2018 அன்று சேலையூர் காவல் நிலையத்தில் என் மனைவி கொடுத்த புகாரின் மீது வழங்கப்பட்ட CSR No.1590/2018 என்றும், அந்த CSR-யை நான் தான் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரிதான். என் மனைவி கொடுத்த புகாரின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்று சொன்னால் சாட்சி புகாரை பார்த்து, புகாரில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் மனைவி புகாரை எதற்காக கொடுத்தார் என்று எனக்கு தெரியும். மேற்படி புகாரில் என் மனைவி ரூ.92,20,000/- 2ம் பிரதிவாதியிடமிருந்து வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. என் மனைவி ரூ.20,00,000/- குறைவாக கொடுத்தது குறித்து 05.10.2018 தேதியிட்ட புகாரில் எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 05.10.2018 தேதியிட்ட புகார் மற்றும் CSR No.1590/2018 ஆகிய இரண்டு ஆவணங்களின் நகல்களை சாட்சி ஒப்புக்கொண்டதால் அந்த ஆவணங்களின் நகல்கள் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பில் RTI மூலம் பெறப்பட்ட ஆவணங்களாகும்) 31.01.2019 அன்று நான் ஒரு புகாரை சேலையூர் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றும், அதன் CSR.No.204/2019 என்றும் சொன்னால் சாட்சி புகார் மற்றும் CSR ஆவணத்தின் நகலை பார்த்து சாட்சி ஒப்புக்கொண்டதால் அந்த புகார் மற்றும் CSR.No.204/2019 ஆவணங்களின் நகல்கள் பி.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பில் RTI மூலம் பெறப்பட்ட ஆவணங்களாகும்) பி.சா.ஆ.3 புகாரை 1ம் பிரதிவாதியின் மீது நான் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் 31.01.2019 தேதியில் 1ம் பிரதிவாதி எனக்கு ரூ.25,00,000/- கொடுக்க வேண்டுமென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 14.02.2019 அன்று என் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தான் வா.சா.ஆ.5 என்றால் சரிதான். வா.சா.ஆ.5 அறிவிப்பில் பிரதிவாதிகள் ரூ.62,54,700/- எங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் வட்டி வேண்டாம் என்று சொன்னதாக சொல்லியுள்ளது குறித்து வா.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ளதா

என்றால் அதுபோல் எதுவும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொல்லவில்லை. வா.சா.ஆ.2ல் அரவிந்த் நகரில் பிரதிவாதிகளுக்கு ஒரு பிளாட் கொடுப்பதாக சொல்லியுள்ளதுபோல் பிரதிவாதிகளுக்கு பிளாட் கொடுத்தோமா என்றால் பிரதிவாதிகள் அந்த பிளாட் வேண்டாமென்று சொன்னார்கள். 28.03.2014 தேதியிட்ட அடமான பத்திரம் வா.சா.ஆ.4ல் பிரதிவாதிகள் ரூ.1,34,56,000/- பாக்கி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ரசீதில் முதல் பிரதிவாதியிடமிருந்து முதல் வாதி ரூ.30,00,000/- வாங்கியதாக உள்ளது என்றால் உள்ளது. 27.09.2017 தேதியிட்ட வா.சா.ஆ.8 ரசீதில் எந்த தொகையும் குறித்து குறிப்பிடவில்லை என்றால் தொகை எதுவும் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.8 ஆனது சுவாதீனம் கடிதமாகும். 27.09.2017 தேதியிட்ட வா.சா.ஆ.9 ரசீதில் தொகை குறித்து குறிப்பிடவில்லை என்றால் தொகை எதுவும் குறிப்பிடவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, ஆனால் கிரய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.1 என் மனைவி கொடுத்த புகாரில் மொத்த வட்டியாக ரூ.23,43,000/- நவம்பர் 2013 கொடுத்துள்ளார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ரூ.23,43,000/- வட்டியானது எந்த தொகைக்கான வட்டி கொடுக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. வழக்குரை பக்கம் 2, பத்தி 10ல் பிரதிவாதிகள் 2 flats-களில் அத்துமீறி நுழைந்து சுவாதீனம் எடுத்து கொண்டார்கள் என்றும், எனது பிரமாண வாக்குமூலம் பக்கம் 5, பத்தி 10ல் பிரதிவாதிகள் இரண்டு flats-களில் அத்துமீறி நுழைந்து சுவாதீனம் எடுத்து கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லியுள்ளேன். பிரதிவாதிகள் இரண்டு flats-களில் அத்துமீறி நுழைந்து சுவாதீனம் எடுத்து கொண்டார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவ்வாறு புகார் கொடுத்தது குறித்து என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அந்த புகாரின் பேரில் CSR கொடுக்காததால் சொல்லவில்லை. நான் புகார் கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.4 அடமான பத்திரத்தில் சொல்லியுள்ள சொத்து குறித்த அசல்

ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்றால் 2ம் பிரதிவாதியிடம் உள்ளது. அந்த அசல் ஆவணங்களை அடமானம் செய்தபோது கொடுத்தேனா அல்லது அதற்கு முன்பே கொடுத்தேனா என்றால் 2ம் பிரதிவாதியின் சகோதரர் விஸ்வநாதனிடம் வா.சா.ஆ.4 அடமான பத்திரத்திற்கு முன்பே கொடுத்தேன். அவ்வாறு 2ம் பிரதிவாதியின் சகோதரர் விஸ்வநாதனிடம் அசல் ஆவணங்களை கொடுத்தேன் என்பதற்கு ஆதாரம் ஏதாவது உள்ளதா என்றால் தெரியவில்லை. நான் 2ம் பிரதிவாதியின் சகோதரர் விஸ்வநாதனிடம் எந்த ஆவணமும் கொடுத்ததாக இல்லை என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.4ல் ஒரே ஒரு சொத்துதான் அடமானம் வைக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 அடமான பத்திரத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் 2ம் பிரதிவாதிதான் தயார் செய்தார். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் 29.03.2014 தேதியிட்ட Email ஆனது நான் 2ம் பிரதிவாதிக்கு அனுப்பியது என்றால் 2ம் பிரதிவாதிதான் தயாரித்து அனுப்பினார். எனது வழக்குரை பக்கம் 7, பத்தி 11ல் மற்றும் எனது பிரமாண வாக்குமூலம் பக்கம் 6, பத்தி 10ல் சர்வே எண்.216/2 என்று ஒரே ஒரு சர்வே எண்ணை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் விஸ்தீரணம் சரியாக உள்ளது. எனது வழக்குரை பக்கம் 7, பத்தி 11ல் மற்றும் எனது பிரமாண வாக்குமூலம் பக்கம் 6, பத்தி 10ல் சர்வே எண்.216/1 என்று குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.4 அடமான பத்திரத்தில் சர்வே எண்.216/1 மற்றும் சர்வே எண்.216/2 ஆகிய இரண்டு சர்வே எண்களும் உள்ளது என்றால் உள்ளது.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)